**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி**

முன்னிலை : **திரு. மா.சந்திரமோகன்., பி.ஏ., பி.எல்.,**

மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி

திருவள்ளுவர் ஆண்டு 2057 பராபவ வருடம் ஆடித் திங்கள் 08–ம் நாள்

2026–ம் ஆண்டு ஜூலை மாதம் 24–ம் நாள் வெள்ளிக்கிழமை

*******

**அசல் வழக்கு எண். 169/2023**

**CNR.No. TNMY07-000277-2023**

பரகத்நிஷா **...வாதி**

**...எதிர்...**

முகம்மது ஹாரிஸ் **...பிரதிவாதி**

இவ்வழக்கு இந்நீதிமன்றத்தில் என்முன்பாக 14.07.2026 அன்று இறுதியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டு வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் S. சுமயா மெரின் அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதி தரப்பில் எதிர் வழக்குரை தாக்கல் செய்யாததாலும், கடந்த 12.07.2024 அன்று பிரதிவாதியை திறந்த நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜரின்மையாலும், தோன்றா தரப்பினராக்கப்பட்டு, அவருக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டும், வாதி தரப்பு வாதுரை, ஆவணங்கள், சாட்சியங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்.

**தீர்ப்புரை**

தாவா சொத்தை வாதி அனுபவிப்பதற்கு பிரதிவாதியோ, அவரது ஆட்களோ அவரது ஏஜெண்டுகளோ எவ்வித இடையூறும் செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரியும், செலவுத்தொகை கோரியும், இவ்வழக்கு வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.



CHANDRAMOHAN M
Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2026.07.24 18:13:14 +0530

1. <u>வழக்குரையின் சுருக்கம்</u>

**(1.1)** தாவா சொத்தானது வேலூர் வைத்தியநாதசுவாமி திருக்கோவிலுக்கு சொந்தமானது என்றும், வாதி, கோவிலாருக்கு பகுதி செலுத்தி வருவதாகவும், வழக்கிடை சொத்து பல வருட காலமாக வாதியின் பெற்றோர்கள் அனுபவித்து வந்தும், அதனை தொடர்ந்து தற்போது வாதியின் அனுபவத்திலும் சுவாதீனத்திலும் இருந்து வருவதாகவும், 09.12.1971 அன்று தாவா சொத்தின் அனுபவத்தை வாதியின் தந்தை வழி பாட்டி மஹபூபா பீவி என்பவர் அவரது சகோதரரிடமிருந்து பதிவு செய்யப்பட்ட செட்டில்மென்ட் பத்திரத்தின் மூலம் பெற்று தாவா சொத்தை ஆண்டு அனுபவித்து வந்ததாகவும்,

**(1.2)** அதன் பிறகு 1973 ஆம் வருடத்தில் ரூ.3000/-க்கு பெரியசாமி படையாட்சி என்பவரிடம் பெந்தக கடன் பெற்றிருந்தார் என்றும், இருப்பினும் தாவா சொத்தின் அனுபவமும் சுவாதீனமும் வாதியின் பாட்டியான மஹபூபா பீவி என்பவரிடமே இருந்ததாகவும், பின்பு 17.07.1997ல் மஹபூபா பீவி என்பவர் தாவா சொத்தின் உரிமையை தனது மூத்த மகனும், வாதியின் தந்தையுமான மைதீன் என்பவருக்கு வாய்மொழி ஹிபா மூலம் கொடுத்துள்ளதாகவும், மேற்படி வாதியின் தந்தை குடும்பத்தின் மூத்த மகன் என்பதால் குடும்பத்தின் அனைத்து பொறுப்புகளையும் ஏற்றிருந்ததாகவும்,

**(1.3)** மேற்படி ஹிபா இஸ்லாமிய சமுதாய பெரியோர்கள் மற்றும் மற்ற உடன்பிறப்புகள் முன்னிலையில் அறிவிக்கப்பட்டதாகவும், வாதியின் தந்தையும் அந்த ஹிபாவை ஏற்றுக் கொண்டு, தாவா சொத்தின் மீது இருந்த பெந்தக கடனை தீர்த்துவிட்டு அதற்கு உண்டான கடன் தீர்க்கப்பட்ட ரசீதையும் சீர்காழி சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண். 1677/1981 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும்,

**(1.4)** அதன் பின்பு வேலூர் வைத்தியநாதசுவாமி திருக்கோயிலுக்கு சொந்தமான அடிமனை மீது வாதியின் தந்தை மைதீன் தனது சொந்த செலவில்



CHANDRAMOHAN M
Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2026.07.24 18:13:20 +0530

வீட்டை புதுப்பித்து பராமரித்து வாழ்ந்து வந்ததாகவும், பின்பு மேற்படி மைதீன் என்பவர் தாவா சொத்தின் அனுபவ பாத்தியத்தை தனது மனைவியும் வாதியின் தாயாருமான ஹக்னிசாபேகம் என்பவருக்கு வாய்மொழி ஹிபா கொடுத்துள்ளதாகவும்,

**(1.5)** வாதியின் தந்தை மைதீன் என்பவரின் இறப்பிற்குப் பிறகு, குடும்ப பொறுப்பை வாதி எடுத்துக்கொண்டு தனது வயதான தாயையும், மற்றும் திருமணம் ஆகாத சகோதரிகளின் பராமரிப்பையும் வாதி ஏற்றுக் கொண்டதால் அவரது தாயார் ஹக்னிசாபேகம் கடந்த 26.08.2022 அன்று தாவா சொத்தின் சுவாதீனத்தை வாதியிடம் எழுத்து பூர்வ ஹிபா ஆவணம் மூலம் ஒப்படைத்து விட்டதாகவும்,

**(1.6)** மேலும் வாதியின் தாயார் ஹக்னிசாபேகம் தனக்கு பாத்தியப்பட்ட மற்ற அசையா சொத்துகளை வாதியின் மற்ற உடன் பிறந்த சகோதரிகளுக்கும் ஹிபா மூலம் அவர்களுக்கான பங்கினை கொடுத்ததாகவும், வாதியின் தந்தையுடன் பிறந்த சகோதர சகோதரிகளும், வாதியின் தந்தை வழி பாட்டி மஹபூபா பீவி வாதியின் தந்தை மைதீனுக்கு தாவா சொத்தை முழுவதுமாக கொடுப்பதில் எந்த ஒரு ஆட்சேபனையும் தெரிவிக்காத காரணத்தினால் மேற்படி மைதீன் வழக்கிடை சொத்தின் மீது உள்ள பெந்தக கடனை முழுவதுமாக தன் சுய சம்பாத்தியத்தை கொண்டு தீர்த்து வைத்துள்ளதாகவும்,

**(1.7)** அதன் பின்னர் வாதியின் தந்தை தனது குடும்பத்துடன் வழக்கிடை சொத்தில் எவ்வித இடையூறுமின்றி வாழ்ந்து வந்துள்ளதாகவும், மேலும் அனைத்து வருவாய் ஆவணங்களையும் வாதியின் தந்தை பெயருக்கு மாற்றப்பட்டதாகவும், இந்த வழக்கின் பிரதிவாதி, வாதியின் கணவரின் சகோதரரும், வாதியின் தந்தையின் சகோதரி நபிஷா பேகம் என்பவரின் மூத்த மகனும் ஆவார், வாதியின் கணவர் இளைய மகன் என்றும்,



CHANDRAMOHAN M
Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2026.07.24 18:13:26 +0530

**(1.8)** வழக்கிடை சொத்தானது வாதியின் தந்தைக்கு வாய்மொழி ஹிபாவாக கொடுக்கப்பட்டு, அதனை அவர் ஏற்றுக்கொண்டது மேற்படி பிரதிவாதிக்கும் தெரியும் என்றும், மேற்படி ஹிபா வழங்கப்பட்டபோது யாரும் எவ்வித ஆட்சேபனையும் தெரிவிக்கவில்லை என்றும், ஏனெனில் வாதியின் தந்தை தனது சகோதர சகோதரிகளின் வளர்ப்பையும், அவர்களின் திருமண செலவுகளையும் ஏற்றுக்கொண்டதாகவும்,

**(1.9)** அந்த வகையில் வாதியின் தந்தையின் சகோதரியும், வாதியின் கணவர் மற்றும் பிரதிவாதியின் தாயாருமான நபிஷா பேகம் என்பவருக்கு 40 சவரன் தங்க நகைகள் சீதனமாக கொடுத்து அனைத்து திருமண செலவுகளையும் செய்து நபிஷா பேகம் திருமணத்தை நல்ல முறையில் செய்து வைத்ததாகவும், மேலும் வாதியின் தாயார் ஹக்னிசாபேகம் அவரது சீதன நகைகளை மேற்படி நபிஷா பேகம் என்பவருக்கு அவரது திருமணத்தின் போது கொடுத்துள்ளதாகவும்,

**(1.10)** வாதியின் தந்தை தனது சகோதர சகோதரிகளை பராமரித்து அவர்களுக்கு உண்டான தேவைகளை பூர்த்தி செய்து திருமண செலவை தானே செய்ததால் தான் ஹிப்பா வழங்கப்படும் போது யாரும் ஆட்ஷேபனை தெரிவிக்கவில்லை என்றும், ஏனெனில் வாதியின் தந்தை மைதீன் தனது சகோதர சகோதரிகளுக்கு அவரவர்களுக்கு உண்டான பங்கைவிட அதிகமாகவே செய்துள்ளதாகவும்,

**(1.11)** மேலும், தற்சமயம் பிரதிவாதி வழக்குச் சொத்தில் வாழ்ந்து வராத நிலையில், பிரதிவாதிக்கும் தாவா சொத்திற்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்றும், வழக்கு சொத்தானது வாதி மற்றும் அவரது கணவரின் பராமரிப்பிலும் சுவாதீனத்திலும் இருந்து வரும் நிலையில் பிரதிவாதி அவ்வப்போது உறவினர் என்ற வகையில் தாவா சொத்தில் அமைந்திருக்கும் வாதியின் இல்லத்திற்கு வந்து வாதியின் கணவர் இல்லாத போது வாதியையும் அவரது வயதான தாயையும்



CHANDRAMOHAN M
Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2026.07.24 18:13:31 +0530

தாவா சொத்திலிருந்து காலி செய்து விட வேண்டும் என்ற நோக்கத்துடன் அச்சுறுத்தி மிரட்ட வருவதாகவும்,

**(1.12)** வாதி கணவரின் மூத்த சகோதரரான பிரதிவாதிக்கு, தாவா சொத்தானது வாதியின் தகப்பனாருக்கு வாய்மொழி ஹிபாவாக அனுபவ பாத்தியம் கிடைக்கப்பெற்றது என்ற விபரமும், அதன் பின்னர் வாதியின் தகப்பனார் வாதியின் தாயாருக்கு தாவா சொத்தில் உள்ள அனுபவ பாத்தியத்தை வாய்மொழி ஹிப்பாவாக கொடுத்த விபரமும், அதன் பின்னர் தாவா சொத்தில் உள்ள அனுபவ பாத்தியத்தை வாதியின் தாயார் ஹக்னிசாபேகம் 26.08.2022 அன்று நோட்டரி பதிவு ஆவணம் மூலமாக தாவா சொத்தின் அனுபவத்தை ஹிபாவாக வாதிக்கு கொடுத்துள்ளார் என்ற விபரமும்,

**(1.13)** அதனைத் தொடர்ந்து தாவா சொத்தை பொறுத்து அனைத்து வருவாய் ஆவணங்களும் வாதியின் பெயருக்கு மாற்றப்பட்டன என்கிற விவரமும் பிரதிவாதிக்கு நன்கு தெரியும் என்றும், இருப்பினும் பேராசை கொண்டு துர்லாபம் அடைய வேண்டும் என்ற எண்ணத்தில் கடந்த 12.10.2023 அன்று பிரதிவாதி தனது அடியாட்களுடன் தாவா சொத்தில் அமைந்துள்ள வாதியின் இல்லத்திற்கு வந்து வாதியை மிரட்டி, வாதியையும் அவரது குழந்தை மற்றும் வயதான தாயையும் தாவா சொத்தில் இருந்து வலுக்கட்டாயமாக சட்ட விரோதமாக காலி செய்ய முயற்சித்ததாகவும், ஆனால் வாதியின் உறவினர்கள் மற்றும் நண்பர்களின் முயற்சியால் பிரதிவாதியை தடுத்து விட்டதாகவும்,

**(1.14)** ஏற்கனவே வாதியின் தாயார் ஹக்னிசாபேகம் என்பவரால் வாதிக்கு 26.08.2022 தேதியிட்ட ஒரு ஹிபா ஆவணம் மேற்படி வழக்கு சொத்தை பொறுத்து ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றும், மேற்படி ஆவணத்தில் சில தட்டச்சுப் பிழைகள் இருந்ததால் அதனை திருத்தம் செய்து பிழை திருத்தம் ஆவணமாக வாதியின் தாயார் ஹக்னிசாபேகம் என்பவரால் வாதிக்கு 18.10.2023 தேதியன்று நோட்டரி பப்ளிக் பதிவு ஆவணமாக ஏற்படுத்தப்பட்டதாகவும்,



CHANDRAMOHAN M
Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2026.07.24 18:13:36 +0530

**(1.15)** எனவே வாதி, பிரதிவதிக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளதாகவும், வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2.** பிரதிவாதி தரப்பில் எதிர் வழக்குரை தாக்கல் செய்யாததாலும், கடந்த 12.07.2024 அன்று பிரதிவாதியை திறந்த நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜரின்மையாலும், தோன்றா தரப்பினராக்கப்பட்டு, அவருக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

**<u>3. இவ்வழக்கில் தீர்வுக்குரிய பிரச்சனை :-</u>**

**இவ்வழக்கில் வாதி கோரியுள்ள பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதா?**

**4.** வாதி தரப்பில் வாதி திருமதி. பரக்கத் நிஷா என்பவர் **வா.சா.1** ஆகவும், கிராம நிர்வாக அலுவலர் திரு. மணிமாறன் என்பவர் **வா.சா.2** ஆகவும், திரு. முகம்மது நசீர் அலி என்பவர் **வா.சா.3** ஆகவும் சாட்சியம் அளித்துள்ளனர். வாதி தரப்பில் **வா.சா.ஆ.1** முதல் **வா.சா.ஆ.7** வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. பிரதிவாதி ஒருதலைபட்சம் ஆக்கப்பட்டுள்ளதால் பிரதிவாதி தரப்பில் சாட்சிகள் ஏதும் விசாரிக்கப்படவில்லை, சான்றாவணங்களும் குறியீடு செய்யப்படவில்லை.

**5.** வாதி தரப்பு வாதுரை மற்றும் வாதி தரப்பு சாட்சி சான்றாவணம் பரிசீலனை செய்து இவ்வழக்கில் இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு தீர்வு காணப்படுகிறது.

**6. <u>தீர்வு</u>**

**(6.1)** வாதி தரப்பு வாதம் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் நன்கு பரிசீலிக்கப்பட்டது. அசல் வழக்கானது நிரந்தர உறுத்துக் கட்டளைப் பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதி தரப்பில் எதிர் வழக்குரை தாக்கல் செய்யாததாலும், கடந்த 12.07.2024 அன்று பிரதிவாதியை திறந்த நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜரின்மையாலும், தோன்றா தரப்பினராக்கப்பட்டு, அவருக்கு



CHANDRAMOHAN M
Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2026.07.24 18:13:41 +0530

எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

**(6.2)** வாதி தரப்பில் வாதியான திருமதி. பரக்கத் நிஷா என்பவர் **வா.சா.1** ஆக விசாரணை செய்யப்பட்டு அவர் மூலமாக 2022-2023ம் வருடத்திற்கு தாவா சொத்திற்கு கட்டப்பட்ட சொத்து வரி ரசீதின் அசல் **வா.சா.ஆ.1** ஆகவும், 02.01.2023ம் தேதியிட்ட தாவா சொத்திற்கான வில்லங்க சான்றின் பதிவிறக்க நகல் **வா.சா.ஆ.2** ஆகவும், 22.09.2023 தேதியிட்ட தாவா சொத்திற்கான மின் கட்டண ரசீதின் இணையவழி சான்று **வா.சா.ஆ.3** ஆகவும், வாதியின் ஆதார் அட்டை அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்ட நகல் **வா.சா.ஆ.4** ஆகவும், 26.08.2022 தேதியிட்ட ஹக்நிஷா பேகம் வாதிக்கு எழுதிவைத்த ஹிபா (எ) தான செட்டில்மெண்ட் பத்திரத்தின் அசல் **வா.சா.ஆ.5** ஆகவும், 18.10.2023 தேதியிட்ட தான செட்டில்மெண்ட் திருத்த பத்திரம் அசல் **வா.சா.ஆ.6** ஆகவும்,

மேலும், கிராம நிர்வாக அலுவலர் திரு. மணிமாறன் என்பவர் **வா.சா.2** ஆக சாட்சியம் அளித்துள்ளார். அவர் மூலமாக 29.08.2023 தேதியிட்ட புங்கனூர் கிராமத்தில் வேளூர் தேவஸ்தானம் ஸ்ரீ வைத்தியநாதசுவாமிக்கு சொந்தமான புல எண்.177/1ல் வாதிக்கு மாடி வீடு உள்ளதாக வழங்கப்பட்ட சான்று **வா.சா.ஆ.7** ஆகவும் சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

**(6.3)** 2022-2023ம் வருடத்திற்கு தாவா சொத்திற்கு சொத்து வரி செலுத்தப்பட்டுள்ளது என்ற விபரமானது **வா.சா.ஆ.1**-ஆன சொத்து வரி ரசீதின் அசல் மூலமும், தாவா சொத்தின் வில்லங்கம் தொடர்பான விபரமானது **வா.சா.ஆ.2**-ஆன 02.01.2023 தேதியிட்ட வில்லங்க சான்றின் பதிவிறக்க நகல் மூலமும், தாவா சொத்திற்கு மின் கட்டணம் செலுத்தப்பட்டுள்ள விபரமானது **வா.சா.ஆ.3**-ஆன 22.09.2023 தேதியிட்ட மின் கட்டண ரசீதின் இணையவழி சான்றின் மூலமும், ஹக்நிஷா பேகம் வாதிக்கு ஹிபா (எ) தான செட்டில்மெண்ட் எழுதிவைத்துள்ள விபரமானது **வா.சா.ஆ.5**-ஆன 26.08.2022 தேதியிட்ட ஹிபா (எ) தான செட்டில்மெண்ட் பத்திரத்தின் அசல் மூலமும், தான செட்டில்மெண்ட்



CHANDRAMOHAN M
Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2026.07.24 18:13:47 +0530

பத்திரம் திருத்தப்பட்ட விபரமானது **வா.சா.ஆ.6**–ஆன 18.10.2023 தேதியிட்ட தான செட்டில்மெண்ட் திருத்த பத்திரம் அசல் மூலமும், புங்கனூர் கிராமத்தில் வேளூர் தேவஸ்தானம் ஸ்ரீ வைத்தியநாதசுவாமிக்கு சொந்தமான புல எண்.177/1ல் வாதிக்கு மாடி வீடு உள்ள விபரமானது **வா.சா.ஆ.7–ஆன** 29.08.2023 தேதியிட்ட கிராம நிர்வாக அலுவலர் வழங்கிய சான்றின் மூலமும் அறிய முடிகிறது.

**(6.4)** வாதி தரப்பில் உரிய வாய்மொழி மற்றும் ஆவண சாட்சியங்கள் மூலம் **இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 101–ன்படி எவர் எதை எக்கூற்றை சொல்கிறாரோ அவரே அக்கூற்றை நிரூபிக்க வேண்டும்** என்ற வகையில் வாதி அவரது வழக்கை நிரூபணம் செய்துள்ளதாக இந்நீதிமன்றம் கருதுகிறது. வாதி அவரது வழக்கை மேற்படி சாட்சிய சான்றாவணங்கள் மூலம் நிரூபித்துள்ள நிலையில், பிரதிவாதி தரப்பில் எதிர் வழக்குரை தாக்கல் செய்யாததாலும், கடந்த 12.07.2024 அன்று பிரதிவாதியை திறந்த நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜரின்மையாலும், தோன்றா தரப்பினராக்கப்பட்டு, அவருக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. பிரதிவாதி தரப்பில் இந்த வழக்கினை மறுதலித்து கட்சி நடத்த வாய்ப்பு இருந்தும் அவர் பயன்படுத்திக்கொள்ளவில்லை.

**முடிவில்,** இவ்வழக்கானது அனுமதிக்கப்பட்டு, தாவா சொத்தை வாதி அனுபவிப்பதற்கு பிரதிவாதியோ, அவரது ஆட்களோ அவரது ஏஜெண்டுகளோ எவ்வித இடையூறும் செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் வாதிக்கு ஆதரவாக வழங்கி, செலவுத்தொகையின்றி தீர்ப்பளிக்கப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிப்பொறியில் நேரடியாகத் தட்டச்சு செய்யப்பட்டதை என்னால் சரிபார்க்கப்பட்டு, பிழைதிருத்தம் செய்யப்பட்டு 2026–ம் ஆண்டு ஜூலை மாதம்



CHANDRAMOHAN M

Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2026.07.24 18:13:52 +0530

24ம் நாள் என் கையொப்பம் இடப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

CHANDRAMOHAN M
Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2026.07.24 18:13:58 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**சீர்காழி.**

**பின் இணைப்பு**
**வாதி தரப்பு சாட்சி**

வா.சா.1 திருமதி. பரக்கத் நிஷா (வாதி)
வா.சா.2 திரு. மணிமாறன்
வா.சா.3 திரு. முகம்மது நசீர் அலி

**வாதி தரப்பு சான்றாவணம்**

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | -- | 2022-2023ம் வருடத்திற்கு தாவா சொத்திற்கு கட்டப்பட்ட சொத்து வரி ரசீதின் அசல் |
| வா.சா.ஆ.2 | 02.01.2023 | தாவா சொத்திற்கான வில்லங்க சான்றின் பதிவிறக்க நகல் |
| வா.சா.ஆ.3 | 22.09.2023 | தாவா சொத்திற்கான மின் கட்டண ரசீதின் இணையவழி சான்று |
| வா.சா.ஆ.4 | -- | வாதியின் ஆதார் அட்டை அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்ட நகல் |
| வா.சா.ஆ.5 | 26.08.2022 | ஹக்நிஷா பேகம் வாதிக்கு எழுதிவைத்த ஹிபா (எ) தான செட்டில்மெண்ட் பத்திரத்தின் அசல் |
| வா.சா.ஆ.6 | 18.10.2023 | தான செட்டில்மெண்ட் திருத்த பத்திரம் அசல் |
| வா.சா.ஆ.7 | 29.08.2023 | புங்கனூர் கிராமத்தில் வேளூர் தேவஸ்தானம் ஸ்ரீ |

| | | |
|---|---|---|
| | | வைத்தியநாதசுவாமிக்கு சொந்தமான புல எண்.177/1ல் வாதிக்கு மாடி வீடு உள்ளதாக வழங்கப்பட்ட சான்று |

**பிரதிவாதி தரப்பு சாட்சிகள்** – இல்லை –

**பிரதிவாதி தரப்பு சான்றாவணங்கள்** – இல்லை –

CHANDRAMOHAN M

Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2026.07.24 18:14:04 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**சீர்காழி.**

**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,**
**சீர்காழி.**

**நேரிய/வரைவு தீர்ப்புரை**
அசல் வழக்கு எண். 169/2023
நாள்.24.07.2026.